வளரும் விண்ணரசு

மலர்: 27 | இதழ்: 10 | அக்டோபர் 2026
Volume : 27 | Issue : 10 | October 2026
தமிழ் மாத இதழ் | தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly | Per copy Rs.20/-

வளரும் கடுகு விதை & பரவும் புளித்த மாவு









தூய தோமா



தூய பிரான்சிஸ் சேவியர்



வில்லியம் கேரி



ஏமி கார்மைக்கேல்



ஹட்சன் டெய்லர்

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
INDIA CHURCH GROWTH MISSION



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

"ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு; கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணை நில்லும்" (2 நாளா.14:11) என்று கூறுகிறார்.

. யூதாவின் இராஜாவாகிய ஆசா, யுத்தகளத்திலே ஜெபித்ததுபோல, இன்றைக்கும் பலமுள்ளவனானாலும் சரி, பலமற்றவனானாலும் சரி கர்த்தருடைய கரம் உதவி செய்ய மாறாதது. அவரையே சார்ந்து ஜெபிக்கும்போது, கர்த்தர் ஜெயம் தருவார்.

ஆகஸ்ட் 31ஆம் தேதி மதுரையில், தரிசனம் பரப்புவோர் கூடுகை நடைபெற்றது. அதில், தமிழ்நாட்டிலுள்ள தரிசனம் பரப்பும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். அதில், எதிர்கால ஊழிய வளர்ச்சி குறித்து அதிகமாக கலந்து ஆலோசிக்கப்பட்டது.

செப்டம்பர் 6ஆம் தேதி மாலையில் சென்னையில் நடைபெற்ற, **MUT** இயக்கத்தின் 33ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள தேவன் உதவினார்.

பெங்களூரு தரிசனம் பரப்புவோர் திரு.ஞானசேகரனும் நானும் இணைந்து, செப்டம்பர் 8 முதல் 12 வரை பெங்களூருவிலுள்ள நமது ஆதரவாளர்களை சந்தித்தோம். அநேக வருடங்களாக நமது இயக்கத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி வருகிற ஆதரவாளர்களை சந்தித்தது அருமையான தருணமாக இருந்தது. அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செப்டம்பர் 13ஆம் தேதியன்று, மதுரையிலுள்ள நமது அயோத்திபட்டி கிராமத்திருச்சபையை பார்வையிடவும், தேவசெய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். இதனை ஒழுங்கு செய்த, திரு ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பு அலுவலர்) அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி தரிசனம் பரப்புவோர் திரு.வினுவும் நானும் இணைந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நமது ஆதரவாளர்களை செப்டம்பர் 14 முதல் 17 வரை சந்தித்தோம். தொடர்ந்து நமது இயக்கத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குவதற்கு துணைநிற்பதாக உறுதியளித்தனர்.

தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...



தரிசனம் பரப்புவோர் சிறப்புக்கூடுகையில் கலந்து கொண்டவர்கள்



பல்கலைநகரில் நடைபெற்ற ஊழியர் சிறப்புக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:
அருள்திரு.G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்
திருமதி. செல்வ டேனி சாலமோன்
திருமதி. ஜெனிபர் ரவிக்குமார்

ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு

நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) துதி–ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

இதழின் உள்ளே...

அருட்செய்தி!	04
நிறுவனரிடமிருந்து...	06
துதித்து மன்றாடுவோம்!	08
வேதாகமத்தின் பக்கங்களிலே...	21
செப்டம்பர் மாத வினா– விடைகள்	23
சரியான விடை எழுதியவர்கள்	24
வேத வினாக்கள்	25
நடப்புச் செய்திகள்	26

ICGM
58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com

வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
ICGM

தரிசனம்: (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

வேத ஆதாரம்: (வெளி.7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்."

செயல்திட்டம்: (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வேத ஆதாரம்: (மத்தேயு 28:19-20)

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டவையாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.



வளரும் கடுகு விதை & பரவுகிற புளித்த மாவு

(மத்தேயு 13:31-33)

இயேசுவின் வாழ்வு சாதனைகளாலும், போதனைகளாலும் நிறைந்தது. போதனைகள் அருளுரைகளாகவும் கதைகளாகவும் அமைந்தன. விண்ணரசு பற்றிய அருமையான உவமைகள் மக்களுக்குப் புரியும்படியாக அமைந்தன.

மத்தேயு 13:31-33 இல் இரண்டு குறிப்புக்களை நாம் வாசிக்கிறோம். முதலாவது ஒரு கடுகு விதை பற்றியது. அடுத்தது புளித்தமாவைப் பற்றியது.

இந்த மாத அருட்செய்தியில் அவை இரண்டையும் தியானிப்போம்.

வளரும் கடுகு விதை: Growing Mustard Seed

விதைகள் பொதுவாக சிறியவை. அதிலும் கடுகு விதை மிகச்சிறியது. சகல விதைகளிலும் சிறியது என்று ஆண்டவரே கூறுகிறார். விதைகள் ஊன்றி வைக்கப் படும்போது வளரத் தொடங்குகின்றன. ஏன்? அவைகளுக்குள் உயிர் இருக்கிறது.

ஒரு முறை சில நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பாழடைந்த ஓரிடத்தைத் தோண்டும்போது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் இருந்த விதைகளால் நிறைந்த ஒரு சிறிய பெட்டியைக் கண்டு பிடித்தார்கள். அந்த விதைகளை நிலத்தில் ஊன்றி தண்ணீர் ஊற்றிய போது அவை முளைவிட்டு வளர்ந்தனவாம். ஏனென்றால், அவைகளுக்குள் உயிர் (Life) இருந்தது.

நாம் சிறியவர்களாக இருக்கலாம். ஆனால் இயேசு நம்முள் இருப்பதால் நமக்கும் உயிர் இருக்கிறது. சிறியவைகள் பெரிய காரியங்களைச் செய்யலாம்.

யாக்கோபு 3:4-5இல் சிறிய சுக்கான் பெரிய கப்பலைத் திருப்பும்; சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்தும். இயேசுவின் கையில் இருக்கும் சிறிய காரியங்கள் பெரிய தேவையைச் சந்திக்கும். 5 அப்பமும் 2 மீன்களும் 5000 பேருக்கு உணவு கொடுத்ததையும், ஒரு சிறிய தாவீது மாபெரும் கோலியாத்தை வென்றதையும் நாம் மறக்கக் கூடாது.

அற்பமான (அல்லது சிறிய) ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை செய்யலாம்? (சகரியா 4:10) என்னும் கேள்வியை ஆண்டவர் கேட்கிறார்.

இயேசுவின் சீடரான தூய தோமாவாலும், பிரான்சிஸ் சேவியராலும், பற்தலமேயு சீகன்பால்க்காலும், வில்லியம் கேரியாலும் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்ட சிறிய கடுகுவிதை போன்ற இயேசுவின் நற்செய்தி இன்று சுமார் 3 கோடி மக்களை இயேசுவின் வழியில் நடக்கச் செய்கிறது.

தனி பெண் மிஷனரியாக டோனாவூரில் சிறுமிகளைக் காப்பாற்றும் பணியைத் தொடங்கியவர் ஏமி கார்மைக்கேல் அம்மையார். அவருடைய 50 ஆண்டு ஊழியத்தின் முடிவில் 1000 சிறுமிகளைக் காப்பாற்றினார். வளர்ந்த கடுகு விதைக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு.

சீன உள்நாட்டு மிஷனை ஆரம்பித்த ஹட்சன் டெய்லர், தனிமனிதனாக ஆரம்பித்த அந்த மிஷனரி ஊழியம், அவர் மறையும்போது 1000 மிஷனரிகளை வைத்திருந்தது. **அவரும் ஒரு கடுகு விதை.**

நமக்குள் இயேசுவின் ஆவியானவர் இருக்கும்போது நாம் வளரத் தொடங்குவோம். ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய ஆரம்பிப்போம். சிறு செடியாக, மரமாக, மாபெரும் மரமாக வளரு

வோம்.

நாம் சிறுபான்மையினர் **(Minority)** என்னும் சிந்தனை தரும் தாழ்வு மனப் பான்மையை **(Inferiority Complex)** நீக்குவோம். அன்று யோனத்தான் தன் ஆயுததாரியிடம் சொன்ன "கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார். அனேகம் பேரைக் கொண்டாகிலும் கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும் ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை" (1 சாமுவேல் 14:6) என்ற வசனத்தை நினைவுபடுத்துவோம்.

நீங்களும் நானும் கர்த்தருக்காக வளரும் –வளரவேண்டிய கடுகு விதைகளே!

பரவும் புளித்தமா: Permeating Yeast (Leaven)

அரிசி/உளுந்து மாவு புளித்தால் அருமையான தோசை– இட்லி கிடைக்கும். கோதுமை மாவு புளித்தால் ருசியான சப்பாத்தி – பூரி கிடைக்கும். இரவில் பாலில் உறை ஊற்றி வைக்கும்போது அது காலையில் தயிராக மாறுகிறது.

புளித்தமா **(Yeast or Leaven)** சிறிய அளவில் தொடங்குகிறது. ஆனால் அதற்குப் பரவும், அல்லது ஊடுருவிச் செல்லும் ஆற்றலும் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அது மாற்றுகிறது.

ஆண்டவர் நாம் உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் இருக்கவேண்டும் என்று கூறினார்.

கடுகு விதை வளருதல் ஒளி போன்று வெளி உலகத்திற்குத் தெரிகிறது. ஆனால் புளித்தமாவின் செயல் உப்பு போல வெளியே தெரியாமல் செயல்படுகிறது.

அந்தரங்கத்தில் நாம் செய்யும் ஜெபம் (மத்தேயு 6:6) புளித்தமாவைப் போல மக்களை மாற்றும் வல்லமை உள்ளது.

ஹட்சன் டெய்லர் சீனாவுக்காக ஒவ்வொரு நாளும் காலை 2 மணிமுதல் 4 மணிவரை ஜெபிப்பாராம். ஆண்டவரின் இரவு ஜெபங்கள் (லூக்கா 6:12) அவரின் சீடர்களைத் தெரிந்தெடுக்க உதவின (லூக்கா 6:13).

கிராமங்கள் – நகரங்கள் – சமுதாயங்கள் மாற வேண்டும் – மாற்றப் படவேண்டும்.

இயேசுவின் நல்ல செய்தி நம்மை மீட்டெடுத்து, புதுவாழ்வைக் கொடுக்கையில் நாம் உயிருள்ள கடுகு விதையாகவும், மாற்றும் (ஊடுருவும்) புளித்தமாவாகவும் மாறுகிறோம்.

நான் ஆண்டவருக்காக வளர வேண்டிய ஒரு கடுகு விதை.

நான் ஆண்டவருக்காக மற்றவரை மாற்றவேண்டிய ஒரு புளித்தமா என்பதை உணருவோமா?

கன்னியாகுமரி மாவட்ட ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு !

நீங்கள் அறிந்தபடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ICGM மிஷனரி ஊழியத்தின், தரிசனம் பரப்பும் ஊழியத்தை, கீழ்கண்ட ஊழியர்கள் செய்து வருகிறார்கள்:

திருமதி. ஹெர்சி லீதியாள் (73389 76700)
திருமதி. இந்திராணி கில்பர்ட் (63851 89700)
திரு. வினு (63851 82700)
திருமதி. பிளஸ்சி (63851 83700)
திருமதி. மேபல் ராணி (63858 69700)
திருமதி. தீபா மோசஸ் (63831 53043)

ஊழியப் பங்காளர்கள் ICGM ஊழியத்தைத் தாங்க, மேற்கண்ட ஊழியர்களை அணுகும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நிறுவனரிடமிருந்து...

அன்புள்ள வளரும் விண்ணரசு வாசகர்களுக்கு,

மீட்பரின் திருப்பெயரால் வாழ்த்துக்கள்.

48 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியத் திருச்சபை வளர்ச்சி மிஷன் மதுரைக்கு அருகே உள்ள பசுமலையில் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலால் தொடங்கப்பட்டது.


முதல் 9 ஆண்டுகள் அதற்கு நான் பொதுச் செயலராக இருந்தேன். அதன் பின் திரு. பி.டி.ராஜன், அருள்திரு விஜயகுமார், டாக்டர். மோகன் மாணிக்கவாசகம், அருள்திரு, டைட்டஸ் கடப்பைச்சாமி, அருள்திரு லெஸ்லி நாகராஜன் ஆகியோர், அந்தப் பொறுப்பில் பணியாற்றினர்.

இப்போது அருள்திரு. டேவிட் சாலமோன் அவர்கள் ஏப்ரல் மாதம் முதல் பொதுச்செயலர் பணியைத் தொடங்கியுள்ளார். அவர் ஏழாவது பொதுச் செயலர்! அவருக்கு என் வாழ்த்துகளும் ஜெபங்களும்.

வளரும் இறையரசு என்ற பெயரில் தொடங்கிய இந்த இதழ் இப்போது வளரும் விண்ணரசு என்ற பெயரில் இயங்குகிறது. முதலில் நானும், பின்னர் ரஞ்சினி ஞானையாவும் ஆசிரியராக இருந்தோம்.

அதன் பின்னர், அருள்திரு கனகரத்தினம் மற்றும் அருள்திரு ஜான் ஆகியோர் அப்பொறுப்பில் இருந்தனர். இப்போது அருள்திரு. பொன்னுராஜ் அவர்கள், சிறப்பாக ஓர் ஆசிரியர் குழுவுடன் பணியாற்றுகிறார். அவருக்கும் ஆசிரியர் குழுவினருவுக்கும் என் வாழ்த்துகள்.

இம்மாதத்தில் "**நாம் ஜெபிக்கும்போது**" என்ற கருத்தை எழுத விரும்புகிறேன். ஏனென்றால், சில மாதங்களாக நம் இதழ் அதிக ஜெபக் குறிப்புக்களைத் தாங்கி வருகிறது. சில கட்டுரைகள் பணி நிலை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. விரைவில் அவையும் வெளிவரும்.



நாம் ஜெபிக்கும்போது...

சீனா உள் நாட்டு மிஷன் (China Inland Mission) என்ற மாபெரும் மிஷனரி சங்கத்தை உருவாக்கியவர், புகழ் பெற்ற மிஷனரியான ஹட்சன் டெய்லர் ஆவார். அவர் ஒருமுறை கூறிய வாசகங்கள்தான் இவை: **"When we work, we work; When we pray God works".**

"நாம் வேலை செய்யும்போது நாம் தான் செயல்படுகிறோம். ஆனால், நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் செயல்படுகிறார்." ஜெபத்தில் வல்லவரான அவரின் அருமையான வாசகம் நமக்கும் அறை கூவல் தருகிறது.

சில சமயங்களில் நமக்குச் சோர்வு வருகிறது. அப்போது, நாம் லூக்கா 18:1-8 எடுத்து வாசிக்கவேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு, "சோர்ந்து போகாமல் எப்போதும் ஜெபிக்கவேண்டும்" என்பதைப் பற்றி சொன்ன ஓர் அற்புதக் கதை அது.

இந்தியத் திருச்சபை வளர்ச்சி மிஷனுக்காகவும், ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

வளரும் விண்ணரசில் வரும் ஜெபக்குறிப்புக்களுக்காக ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

மீட்பரின் நற்செய்திப்பணியில்,

என்.ஜே. ஞானையா.

ICGM
வங்கி கணக்கு விபரங்கள்

ACCOUNT NAME	:	INDIA CHURCH GROWTH MISSION
ACCOUNT NUMBER	:	10143136773
BANK	:	STATE BANK OF INDIA
BRANCH NAME	:	SELAIYUR, CHENNAI- 73
IFSC CODE	:	SBIN0007948

அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கை

ACCOUNT NAME	:	INDIA CHURCH GROWTH MISSION
ACCOUNT NUMBER	:	11194454531
BANK	:	STATE BANK OF INDIA
BRANCH NAME	:	VINAYAGA NAGAR, MADURAI.
IFSC CODE	:	SBIN0001479

ஆலய கட்டிட நிதிக்காக

ACCOUNT NAME	:	INDIA CHURCH GROWTH MISSION
ACCOUNT NUMBER	:	926010015545855
AXIS	:	AXIS
BRANCH NAME	:	SELAIYUR, CHENNAI-73
IFSC CODE	:	UTIB0001181

மருத்துவ நிதிக்காக

icgm1014@sbi

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியோ அல்லது வங்கி கணக்குகள் மூலமாகவோ, உங்கள் காணிக்கைகளை அனுப்பி, அதன் விபரங்களை SMS/whatsapp மூலமாக **94459 24440** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும். | நன்றி.

ACCOUNT NAME	:	IRAI ARASU TRUST
ACCOUNT NUMBER	:	10143136762
BANK	:	STATE BANK OF INDIA
BRANCH NAME	:	MK UNIVERSITY - MADURAI-21
IFSC CODE	:	SBIN0002235

பத்திரிக்கை ஊழியத்திற்காக

தமிழ்நாடு



கள்ளக்குறிச்சி மாவட்டம்

அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்

அக்டோபர்-1 **திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொட்டப்புத்தூர், வெண்ணியூர், எருக்கம்பட்டு, கெண்டிக்கல், மேல்பாச்சேரி, நாரணம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, வெண்ணியூர் கிராமத்திற்கு சாலை அமைக்கப்பட்டதற்காக, கார்த்திகா தன் கணவருடன் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட தனுஷ்குமார், ராதா, வெங்கடேசன், சுகன்யா, ராணி, நிதிஷ்குமார், ஜாய், பிருந்தா, கோவிந்தராஜ், ரியா, கலைமணி, குமரேசன் ஆகியோருக்காகத் துதிப்போம். தனுஷ்குமார் இருதய நோயிலிருந்து சுகம் கிடைக்க, கோவிந்தராஜ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, கிணத்தூர் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

கடலூர் மாவட்டம்

அருட்பணியாளர் : திரு.M. லிங்கம்

திருமதி. கலா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, கலாநேசத்திற்கு சுகம் கிடைத்ததற்காக, ரமேஷ் பாபு-சங்கீதா தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட செல்லம்மாள், பரமசிவம், விஜயபாரதி, விஜயா, தமிழ்ச்செல்வி, ஆகாஷ், வளர்மதி, முத்தையன், வேதநாயகி, ராமசாமி, கீதா, அஞ்சலை, விஜயலட்சுமி, சுப்பிரமணியன், அசோக்குமார், தினேஷ், வீரபாண்டியன், ரமேஷ், வீரபாபு ஆகியோர் இரட்சிக்கப்பட, மணி மோசஸ் வயிற்று நோயிலிருந்து சுகம் பெற, சங்கீதா, உமா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் : திரு.V. சிவராமன்

திருமதி. பெரியநாயகி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, அஞ்சலை புதிதாக சபை ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, பிரியாவுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கிருஷ்ணமூர்த்தி, நவீன், மாதேஷ், விக்னேஷ், ராஜீவ்காந்தி, பிரகாஷ் ராஜ் ஆகியோர் இரட்சிக்கப்பட, கிருஷ்ணமூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பிரியதர்ஷினிக்கு விரைவில் திருமணம் நடைபெற-தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

ஈரோடு மாவட்டம்

அக்டோபர் -2

அருட்பணியாளர்:

திரு.G.தனம் யோகராஜ் - திருமதி.டான்சி

மாதாயி, ராமாயி, பிரியா, பாரதி, பாலசுப்பிரமணியன், சாந்தா, நவீன், வள்ளியம்மாள் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, கிட்டம்பட்டி, தேவலதாண்டா ஆகிய பகுதிகளில் புதிய ஜெபக்குழு அமைக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :

திரு. அதிசய அமலன்

திருமதி. ஆனந்தி விமலா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையம், சாணார்புதூர், எலத்தூர், ராகுல் கார்டன், செட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, குப்பாயம்மாள், மாரப்பன் ஆகியோர் விசுவாசத்தில் வளர, பேச்சியின் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, பரிமளா, சுப்பிரமணி, பாப்பாத்தி ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட சிந்து, பூவாயி, பார்வதி, ராமு, சுரேஷ், பிரியா, கிருத்திகா ஆகியோர் இரட்சிக்கப்பட, குப்பாயம்மாள் பாதத்தில் உள்ள புண் சுகம் அடைய, கீதா, மரகதம் ஆகியோர் மீண்டும் சபை ஐக்கியத்தில் இணைந்திட ஜெபிப்போம்.

கோயம்புத்தூர் மாவட்டம்

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :

திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோட்டூர், குள்ளகவுண்டனூர், அரசூர், பூவளபருத்தி, பொன்னாச்சியூர், உப்பிலியனூர், பில்சின்னாம்பாளையம், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, ராம்குமார், ரகு, பிரவீன், சௌமியா, காந்தி, பாண்டியராஜ், அசோக் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கணேஷை தேவன் விபத்திலிருந்து காப்பாற்றியதற்காக, ராஜேஸ்வரி அறுவைசிகிச்சை இல்லாமல் சுகம் பெற்றதற்காக, இஸ்ரவேலுக்கு வாழ்க்கைத் துணை கிடைத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் சபைக்கு வர, பொன்ராஜ், ரவி, ராஜேஸ்வரி (நரம்பு பாதிப்பு நோய்) சுகம் பெற. இஸ்ரவேல் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, கலாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: **அக்டோபர்-3**

திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தொண்டாமுத்தூர், குறுஞ்சேரி, மாமரத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, பிரேம்குமார் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக, ஜெயசீலிக்கு வீடும் வேலையும் கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட வள்ளியம்மாள், விக்கி, காளீஸ்வரி, ஜெயக்குமார், பாப்பாத்தி, வில்லியம், மணியன் குடும்பம், பிரேம், நித்தியா, சாலினி, ராமன் ஆகியோர் இரட்சிக்கப்பட, ஏஞ்சல் மகனுக்கு சுகம் கிடைக்க, தினேஷ் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :

திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்
திருமதி. செல்லாண்டீஸ்வரி

கலா திருமுழுக்குப் பெற்றதற்காக, ஜெகன், ஜெனிபர் ஆகியோர் சுகம் பெற்றதற்காக, அஜித், நிவேதா விசுவாசத்தில் வளருவதற்காக, ஊழியர் இம்மானுவேல் சந்திரசேகரனுக்கு முதுகுத்தண்டுவட அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். சந்தோஷ் மனநோயிலிருந்து சுகம் பெற, வித்யா விசுவாசத்தில் வளர, முத்துவேல் சுகம் பெற, சித்ராவின் வீடு புதுப்பிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :

திரு.R. ஸ்டீபன் செல்வகுமார்
திருமதி. கரோலின்

பொள்ளாச்சி பகுதியில் வீட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்காக, இரண்டு குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, அந்தோணி ராஜனுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பொன்னரசி, அரவிந்த், சித்ரா, நாகக்கனி, சின்னமணி, ஜோதி ஆகியோர் இரட்சிக்கப்பட, கலாவிற்கு சுகம் கிடைக்க, ராமசாமி, மகேஷ், ராஜாமணி, குமார் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க, ரமேஷ், சூர்யா ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற, ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

திருப்பூர் மாவட்டம் **அக்டோபர்-4**

அருட்பணியாளர்:

திரு.S. பால்ராஜ் -திருமதி. மரியாள்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சக்கல்பட்டி, சின்ன மருதூர், கம்பளியம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, தியாகு-பிரியா தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்ததற்காகத் துதிப்போம். ராமசாமி, சாந்தா ஆகியோருக்கு சுகம் கிடைக்க, நித்தியா, பிருந்தா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஆலய மறுகட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் : திரு.G. பால்துரை
திருமதி. ஜெபரூபி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக சந்திக்கப்பட்ட அனுப்பப்பட்டி கிராமத்திற்காக, ராமலிங்கம் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட 18 சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்காக, அம்சவேணி நிறைவான சுகம் பெற, ராஜ்குமாருக்கு பதவி உயர்வு கிடைக்க, ராஜேஷ், அஸ்வந்த், மணிவண்ணன், ஜீவா, வசந்தி, சுமித்ரா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, பணித்தள பகுதியில் நல்ல மழை கிடைக்க ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :

அருள்திரு. சாலமோன்ராஜ்
திருமதி. ஜெயக்கொடி

அறுவைச் சிகிச்சையின்றி செல்லம்மாள், ராஜா ஆகியோர் சுகம் பெற்றதற்காக,

ஆபிரகாம்-ராஜம்மாள் ஆகியோர் இருதய வால்வு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஏசுமரி கர்ப்பப்பை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, வடிவேல், கிருஷ்ணமூர்த்தி, மாணிக்கம் ஆகியோர் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராணி, கன்னியம்மாள், மாரியம்மாள் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, 3 வயது முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுகம் பெற, ஊழியர் (முதுகுத்தண்டு வட நோய்), ஊழியரின் மனைவி (சர்க்கரை நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

திருச்சி மாவட்டம் **அக்டோபர்-5**

அருட்பணியாளர் :
திரு. பிரவீன்குமார்-திருமதி. மீனா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், மாராடி ஆகிய கிராமங்களுக்காக, மீனாவுக்கு கிடைத்த சுகத்திற்காக, லூர்டஸ் புதிதாக ஆலயத்திற்கு வருவதற்காகத் துதிப்போம். நிவாஸ் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, லூர்டசுக்கு திருமணம் நடைபெற, யாபேஸ் சுகம் பெற, ஆபிரகாமுக்கு வேலை கிடைக்க- திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
திரு.B. தினேஷ் - திருமதி. எமீமா பியூலா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழக்குறிச்சி, கீழக்கண்டார் கோட்டை, மேலக்கண்டார் கோட்டை, மாவடிகுளம், நத்தமாவுபட்டி மலையடிவாரம் ஆகிய கிராமங்களுக்காக, குமார், கணேசன் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட மூர்த்தி, தேவி, கணேசன், ஜோதி, சிலம்பரசன், சூர்யா, வேளாங்கண்ணி, பூங்கொடி, பிரசாத், ஜோதிமணி, கலா ராணி, சத்யா, அபிநயா, விஷால் ஆகியோர் இரட்சிக்கப்பட, வேளாங்கண்ணி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, வின்சென்ட்-பூங்கொடி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, மூர்த்தி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க-வேலை கிடைக்க, கணேஷ் ராஜ் மனநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

மதுரை மாவட்டம்

அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்
திருமதி. பவுலின் கிரேஸ்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், பெரிய வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி, வடக்கம்பட்டி காலனி ஆகிய கிராமங்களுக்காக, லேவிக்கு சுகம் கிடைத்ததற்காக, மஞ்சுளாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, சதீஷ், தமிழ்மணி ஆகியோருடைய மகன்களுக்கு திருமணம் நடைபெற்றதற்காக, அமுதாவுக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட சிந்தாமணி, சிந்தாமணி மகன், மஞ்சுளா, லட்சுமி, வளர்மதி, மாரியம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் : **அக்டோபர் -6**
திரு.S. சாமுவேல்-திருமதி. ரோகிணி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேட்டுப்பெருமாள் நகர், T.வாடிப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சாந்தி வீடு கட்டியதற்காக, லதாவுக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட நாகராஜ், பிரியா, சாந்தி, ஆனந்தன், சரத், சுரேஷ், சுதாகர் ஆகியோர் இரட்சிக்கப்பட, நாகராஜ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ராஜேஸ்வரி கணவனுடன் சேர்ந்து வாழ, பார்த்தீபன், நதியா, பிரியா, அங்கயற்கண்ணி ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
திரு. கந்தசாமி-திருமதி. முருகம்மாள்

மதன்குமார் கல்லூரியில் சேர்ந்ததற்காக, மணிமேகலை மகனுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதற்காக, குமார் கால் எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். மதன் குமாரின் கல்லூரித் தேவைகள் சந்திக்கப்பட, பழனிவேலின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட-தடையின்றி திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
திரு.P. சத்தியநாதன்-திருமதி. கிறிஸ்டி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குச்சம்பட்டி, கண்ணாபட்டி, கோபாலபுரம், சத்திரப்பட்டி, ஆகிய கிராமங்களுக்காக, வாலிபர் முகாமில் 80 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பாஸ்கரன், கௌதம், ஆகாஷ், கமலபூரணி, சக்திவேல், அகிலா ஆகியோர் இரட்சிக்கப்பட, லட்சுமி, கஸ்தூரி, மகேஷ், மேரி கணவர், கார்த்தீஸ்வரன் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள, காந்திமதி, மேரி ஆகியோர்

கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

அக்டோபர்-7

அருட்பணியாளர் :
திரு.P. ராஜா-திருமதி. அன்னாள்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல், மொட்டைப்பாறை, காந்திநகர், எம்ஜிஆர் காலனி, குன்னணம்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட கண்ணன், மணி, ஸ்வேதா, அருண், சீதா, ராஜா, வேணி ஆகியோருக்காக, ஸ்வேதா மன அழுத்த நோயிலிருந்து விடுதலை பெற்றதற்காக, ஜெயா இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். அருண்குமார், சிந்தனைச்செல்வம் ஆகியோருடைய குடும்பங்கள் கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற-நிரந்தரமான வேலை கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
திரு. காளிமுத்து-திருமதி. குமுதா

இன்பம் வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெற்றதற்காக, பேருந்தில் இருந்து தவறி விழுந்த அபிஷா எந்த காயம் இல்லாமல் பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சபீனாவிற்கு நிறைவான சுகம் கிடைக்க, கலைச்செல்விக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சிவதர்ஷினி மனச்சோர்வு நீங்கி நல்லமுறையில் படிக்க, திலகவதியின் இடத்திற்கு பட்டா கிடைக்க, ஊழியரின் வீடு மராமத்து வேலை செய்யப்பட ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் : திரு. ஏனோக்
திருமதி.பாலின் செளந்தர்யா

விவேகானந்தர் முதுகுத்தண்டுவட நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, சர்மிளாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். அனாய்டன் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சூர்யா, ரீனா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, செல்வம் குடிப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, திருச்சபை வளாக மராமத்து வேலைகளுக்கான தேவைகள் சந்திக்கப்பட, விக்டோரியாவின் மனநோயிலிருந்து சுகம் பெற, அழகுத்தாயின் வீடு கட்டுவதற்கானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

அக்டோபர்-8

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :
திரு.M. அகஸ்டின்-திருமதி. ஜோஸ்பின்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சங்கம்பட்டி, செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்தி நகர், சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, சித்ராவுக்கு தேவன் கொடுத்த விடுதலைக்காக, ரோஷினி, ஜோஷுவா ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கோபால், ராஜாராம், கஜேந்திரன் வீடு கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட, மீனா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
சகோதரி. எஸ்தர் செல்வராணி

ஈஸ்வரன் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, சத்யாவின் வழக்கு வெற்றி பெற்றதற்காகத் துதிப்போம். சகோதரனை இழந்த மாயக்காவின் குடும்பத்திற்கு ஆறுதல் கிடைக்க, ஒச்சுக்காளை ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :
அருள்திரு.M. மூவேந்திரன்
திருமதி. விஜயா

அம்சுவுக்கு கண் அறுவைச்சிகிச்சை நடைபெற்றதற்காக, ராமாயி மகளுக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, ராஜனுக்கு வேலை கிடைத்ததற்காக, இராமாயி கணவர் இந்து கோவிலுக்கு போக கட்டாயப்படுத்திய போது தேவன் போகவிடாமல் தடுத்ததற்காக, செல்வி குடும்பத்தில் அனைவருக்கும் சுகம் கிடைத்ததற்காக, அவினாஷ், கார்த்திகா, சுப்புத்தாய், ரவிச்சந்திரன், சாந்தி, கருணாகரன், பாண்டி, மாரி, சிவராமன் ஆகியோர் நற்செய்தியைக் கேட்டதற்காகத் துதிப்போம். சந்திராதேவியின் உடைந்த கால் சரியாக, செல்வி கால் வலியிலிருந்து சுகம் பெற, ராஜன், மணி, குமார் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, கணவனை இழந்த முருகேஸ்வரிக்கு தேவன் ஆறுதல் தர, கார்த்திகா ஜஸ்வர்யா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

அக்டோபர் -9

அருட்பணியாளர் :
திரு.A. பால்ராஜ்-திருமதி. ஏஞ்சல்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாக்கியலட்சுமி, கிருஷ்ணன், குபேரன், விக்னேஸ், புஷ்பா, பாண்டீஸ்வரி, இந்திரா, பாலன், சாரதா ஆகியோருக்காக, புதிதாக ஆலயம் வந்த குபேரன், பாலன், சாரதா, முனியப்பன் ஆகியோருக்காக, சிலம்பரசன் மனைவியோடு சேர்ந்து வாழ்வதற்காகத் துதிப்போம்.

விக்னேஸ்வரன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, பாலனுக்கு திருமணம் நடைபெற- குடும்பமாக இரட்சிக்கப்பட, குபேரன் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :

திரு.G. ஜெகன்-திருமதி. திவ்யா

புதிதாக நற்செய்தி கேட்ட தேவ பாக்கியநாதன், பிரியதர்ஷினி ஆகியோருக்காகத் துதிப்போம். மனோஜ், அஞ்சுக்கனி ஆகியோருடைய குடும்பத்திற்கு சமாதானம் கிடைக்க-ஆலயத்திற்கு வர, பிரியதர்ஷினிக்கு சுகம் கிடைக்க-கணவருடன் சேர்ந்து வாழ, ராஜபாண்டிக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை

அருட்பணியாளர் :

திரு. பிலிப் முருகன்-திருமதி. அனிதா

சத்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சிந்தியா கணவர், எஸ்தர் ராணி, வைஜெயந்தி ஆகியோருடைய குடும்பங்கள் இரட்சிக்கப்பட, ஜோதியம்மாள், கொடியம்மாள் ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

சுயசார்புத் திருச்சபை **அக்டோபர்-10**

அருட்பணியாளர் :

திரு. வயநாட்டுமுத்து-திருமதி. கனியமுது

ஊழியரின் தகப்பனார் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். ராணி மகளுக்கு சுகம் கிடைக்க, சாமுவேலுக்கு நல்ல வேலை கிடைக்க-ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, கனகாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சீதாவுக்கு நிரந்தரமான வேலை கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :

திரு.J. ஜெயகுமார்-திருமதி. கனி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளப்பாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, தையல் பயிற்சியில் 18 பேர் கலந்து கொள்வதற்காக, மணப்பட்டியில் உள்ள சகோதரிகள் நற்செய்தி பணியில் ஈடுபடுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஊழியர் மனைவி கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

தேனி மாவட்டம்

அருட்பணியாளர் :

திரு.P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, வண்டியூர், ராமகிருஷ்ணாபுரம், ராஜக்கல்பட்டி, ராயவேலூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட பாண்டி, செல்வன், மகேஷ் குமார், சின்னத்துரை, அழகி, லட்சுமி, பாண்டி, கண்ணன், தங்கப்பாண்டி, ராஜாத்தி, மாயி, அருணாச்சலம், சக்தி, சக்திப்பிரியா, பார்த்திபன், நாகலட்சுமி ஆகியோர் இரட்சிக்கப்பட, நாகராஜன், தங்கம்மாள் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, கருப்பசாமியின் மனைவி இருதய நோயிலிருந்து சுகம் பெற, வண்டியூர் பாலக்கோம்பை, தெப்பம்பட்டி ஆகிய கிராமங்களில் சிறுவர் ஊழியம் செய்வதற்கான தடைகள் நீங்க, புதிய ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர் : **அக்டோபர் -11**

திரு.G. நாதன்-திருமதி. மேகலா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், தேக்கம்பட்டி, T.மீனாட்சிபுரம், அன்னை இந்திரா நகர் ஆகிய கிராமங்களுக்காக, சரண்யாவுக்கு பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட கணேஷ், ராமுத்தாய், ராஜேஷ், கண்ணன், வனிதா, ஜெயலட்சுமி, செல்லம்மாள், முத்து, இந்துஜா, சண்முக லதா, சதீஷ், ராஜ்குமார், முத்துராஜ் ஆகியோருக்காக, ராஜேஷ் கண்ணன் குடும்பம் இணைந்திட, ஜெயலட்சுமி, செல்லம்மாள் ஆகியோர் புற்று நோயிலிருந்து சுகம் பெற, முத்து ராஜ்குமார் சுகம் பெற, சண்முகராஜ் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, செல்லப்பாண்டியன் வீட்டுக்கு பட்டா கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர் :

திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, விஜயலட்சுமி, இரகுபதி, மூக்காண்டி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட அம்பிகா, மகேஸ்வரி ஆகிய குடும்பங்கள், ராஜா ஆகியோர் இரட்சிக்கப்பட, வாசுகி மகன் மற்றும் மகளுக்கு திருமணம் நடைபெற, ராமலிங்கம், ஸ்டீபன், மகேந்திரன் ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சுதாவுக்கு சுகம் கிடைக்க, ஆரோக்கியமேரி வீடு கட்டப்பட ஜெபிப்போம்.

விருதுநகர் மாவட்டம்

அருட்பணியாளர் :

அருள்திரு.B. சாமுவேல் கணேசன்

திருமதி. விஜயா

குட்டியம்மாள், பிரதீப் ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். அங்கம்மாள் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, பணித்தள கிராமத்தில் நல்ல மழை பெய்ய ஜெபிப்போம். அங்கம்மாள் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

தென்காசி மாவட்டம்

அக்டோபர்-12

அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேலநீலிதநல்லூர், மீன் துள்ளி, கீழநீலிதநல்லூர், குருக்கள்பட்டி, சத்திரம், அழகு நாச்சியாபுரம் ஆகிய பகுதிகளுக்காக, புதிய கிராமங்களில் 600க்கும் மேலான கை பிரதிகள் கொடுக்கப்பட்டதற்காக, மாலை நேரத்தில் நற்செய்திக்கூட்டங்கள் நடைபெற்றதற்காக, ராஜா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். வேதமணி புற்று நோயிலிருந்து சுகம்பெற ஜெபிப்போம்.

கரூர் மாவட்டம்

அருட்பணியாளர் :

திரு. J. பவுல்ராஜ்- திருமதி. எமீமாள்.

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரூர், குப்பை மேட்டுப்பட்டி, ஆத்தூர், செல்லரப்பாளையம், பஞ்சமாதேவி, சமத்துவபுரம், ஜெயந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். சந்துருவுக்கு நிறைவான சுகம் கிடைக்க, பிரசாத், நதியா கணவர் ஆகியோர் இரட்சிக்கப்பட, வனிதாவின் வீடு கட்டுமானப்பணிகள் நிறைவடைய ஜெபிப்போம்.

விழுப்புரம் மாவட்டம்

அருட்பணியாளர் :

திரு.D. தங்கராஜ்-திருமதி. எஸ்தர் பிரியா

மடப்பட்டு, பரவனேந்தல், பருகம்பட்டு, இருந்தை, சித்தானங்கூர், மேட்டத்தூர், செம்மணந்தல், குடிமாங்குப்பம் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, டைசன்-கிறிஸ்டி தம்பதிக்கு கிடைத்த ஆண்குழந்தைக்காக, அம்பிகா சிறுநீரக நோயிலிருந்து குணமாகி வருவதற்காக, ராஜ் எலிசபெத் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, பர்வதம் குடும்பம் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காக-வீடு கட்டப்பட்டதற்காக, ஹேமாவுக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். சிவசங்கரி, சாமுண்டீஸ்வரி ஆகிய குடும்பங்கள், ஆகாஷ், சிந்து, ரஞ்சிதா, பிரகாஷ் ஆகியோர் இரட்சிக்கப்பட, பென்னட்டிடம் நகை வாங்கியவர்கள் திரும்ப கொடுக்க, சிவகாமி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க-இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அக்டோபர்-13

தரிசனம் பரப்புவோர்

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, ஊழியர்கள்: திரு.R. பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்லி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு.T.S. தெங்கோலுன் ஹோகிப், திரு சின்ஹன் ஷியாம் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

அக்டோபர் -14

மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, ஆதியாகமம்-நியாயாதிபதிகள் வரை உள்ள புத்தகங்களின் மொழி பெயர்ப்புப் பணி

விரைவில் முடிவடைய, சுக்மன் மாத்லாம் (1 & 2 நாளாகமம்), மங்கள்தாய் (நெகேமியா) ஆகியோர் செய்துவரும் மொழி பெயர்ப்புப் பணிக்காக, மொழி பெயர்ப்புப் பணிகள் முடிவடைந்த எஸ்றா, யோனா, ரூத் ஆகிய புத்தகங்கள் பிழைத்திருத்தம் செய்யப்பட ஜெபிப்போம்.

தலைமை அலுவலகம்

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

அக்டோபர் -15 வளரும் விண்ணரசு

இம்மாத இதழ் வெளியிடப்பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, வாசகர்கள் விரும்பும்வண்ணம் இதழ் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

நிறுவனர்கள்

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

நிர்வாகம்

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Mrs. பிரே யூஹா, திரு.K. ஜான்சன், Rev.Dr. தினகரன் ரிச்சர்ட், திரு.J.E. பால் ஆபிரகாம், Dr.D. ஸ்டீபன், திரு. தில் சங்கீத் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

இறையியல் கல்வி அக்டோபர்-16

இறையியல் கல்வி பயிலும் 22 பேருக்காகத் துதிப்போம். லால்மின்தாங், பூர்னுசந்திரா, தெபோரா, ஆல்பா, ராஜ்ராம், சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, சோம்சிங், நெதன்லங், சோந்த்ரோகுமார் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:

கன்னியாகுமரி மாவட்டம்

அருட்பணியாளர்:
திரு. ஒமெந்திராகுமார்
திருமதி. சவீத்தா குமாரி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், நைனாபுதூர், வடசேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, முட்கி விபத்திலிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ரூபி, சாமு பஹடியா ஆகியோர் நிறைவான சுகம் பெற, மது, சாந்தி பஹடியா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. ஜாகேஷ் துக்கா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கம்பிபாலம், பறக்கை, தெங்கம்புத்தூர், நைனாபுதூர், காட்டுப்பிள்ளை ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஊழியத்திற்காகத் துதிப்போம். தெங்கம்புத்தூரைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் புலம்பெயர்ந்த தொழிலாளிகள் நடுவில் நற்செய்தி அறிவிக்கப்பட ஜெபிப்போம்.

வளரும் விண்ணரசுவுக்கு
சந்தா செலுத்தி
பத்திரிக்கை ஊழியம்
தொடர்ந்து நடைபெற உதவுங்கள்.



லாய்ட் லார்பீர் அமெரிக்க நாட்டில், கலிபோர்னியா மாநிலத்தில் 1888 ஆம் ஆண்டு பிறந்தவர். தனது இறையியல் படிப்பை முடித்தபின் ஆண்டவரின் அழைப்பைப் பெற்று , அமெரிக்கன் மிஷன் மூலமாக 1917 ஆம் ஆண்டு தனது 27 ஆம் வயதில் மதுரைக்கு வந்தார்.

மதுரைக்கு அருகேயுள்ள பசுமலை என்னும் ஊரில் தங்கி, 42 ஆண்டுகள் அருட்பணி செய்தார். கல்விப்பணியில் நாட்டம் நிறைந்த அவர் பசுமலை உயர் நிலைப்பள்ளிக்கும், ஆசிரியர் பயிற்சிப்பள்ளிக்கும் தலைமை ஆசிரியராக இருந்தார்.

நற்செய்திப்பணியில் ஆர்வம் காட்டிய அவரும் அவருடைய மனைவி எல்வா லார்பீரும், 1942 ஆம் ஆண்டு "தெய்வீக அன்பு" **(Love Divine)** என்னும், 4 மணி நேரம் நடைபெறும் நாடகத்தை ஓர் மலையடிவாரத்தில் அமைந்த "அரங்கசாலையில்" தொடங்கினர்.

இன்றுவரை நடைபெற்று வரும் அந்த நாடகம் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இயேசு பெருமானின் வரலாற்றை அறிவித்தது.

வார இறுதிகளில் தன்னுடைய சைக்கிளிலேயே பல கிலோ மீட்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள சிறிய சபைகளையும் அந்தச் சபைகளின் போதகர்களையும் உற்சாகப்படுத்துவார். நற்செய்தி நூல்களையும் வழங்குவார்.

(மதுரையிலிருந்து 130 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கோம்பை என்னும் சிற்றூரில் அவர் கொடுத்த புதிய ஏற்பாட்டைப் படித்து இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் என் தாத்தா வீ.பரமசிவமும், என் தந்தை வீ.ப. நடராசனும் ஆவர்.)

42 ஆண்டுகள் தமிழ் நாட்டில் பணி செய்தபின் தனது 69 ஆம் வயதில் ஓய்வுபெற்று அமெரிக்காவுக்குத் திரும்பச் சென்றார். 80 ஆம் வயதில் ஆண்டவரிடம் சென்றார்.

தனது வாழ்வையே இந்தியாவுக்காக-தமிழ்நாட்டிற்காகக் கொடுத்த அருட்பணியாளர் லார்பீரை நாம் மறக்க முடியாது.

***

பெங்களூரு ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு !



பெங்களூருவை மையமாகக் கொண்டு **ICGM** தரிசனம் பரப்பும் ஊழியத்தின் உதவி இயக்குனராகப் **(Associate Director – Vision Casting)** பணியாற்றி வந்த திரு. விஜயசங்கர், தனிப்பட்ட மற்றும் சொந்தக் காரணங்களால் **ICGM**இல் தனது பணியைத் தொடர்ந்து செய்ய இயலாத சூழ்நிலையில் இருப்பதாகத் தெரிவித்து, தன்னை உடனடியாகப் பணியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, 28.08.2026 முதல் **ICGM** பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இனி, பெங்களூருவில் பணியாற்றி வரும் மற்றொரு தரிசனம் பரப்பும் ஊழியரான திரு. ஞானசேகரன் **(73387 29700)** உங்களைச் சந்தித்து தரிசனம் பரப்பும் பணியை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ளார். உங்களது ஆதரவைத் தொடர்ந்து தர அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

அருட்பணியாளர்கள்: திரு. லல்துராம் சலாம். அக்டோபர்-17

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, ராம்தாய் சலாம், லலித் சலாம் ஆகியோர் சுகம் பெற்றதற்காக, சோமரு சலாம் குடும்பத்தினர் விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காகத் துதிப்போம். சகாரோ சலாம் மலேரியாவிலிருந்து சுகம் பெற, மங்கு பொட்டாய் வீடு கட்டி முடிக்கப்பட–தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சந்து சலாம் திருமதி. சோன்பத்தி சலாம்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி, கோடா ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, கத்வா நேத்தம், ராஜேந்திர துக்கா, தீஜா கச்லாம் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நங்காய் நேத்தம், சீமா கருங்கா, மகேஸ்வரி, கேசவ், கம்சிலா, சாந்தி, லிலாபதி, ரஜாய் உய்கே ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம் திருமதி. சுசீலா மாத்லாம்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, மண்ணு பொட்டாய் நல்லமுறையில் பேசுவதற்காக,சுஸ்மிலா விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மையா, மேத்தி, ஷிவ் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். எல்மான், ஜெய்மதி ஆகியோர் நிறைவான சுகம் பெற, சிங்காரோ கணவரோடு சேர்ந்து வாழ, சரிதா மீண்டும் பள்ளியில் சேர்ந்து படிக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. கலியா துக்கா திருமதி. ரூப்பாய் துக்கா அக்டோபர்-18

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, ஆமஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, சன்வாரி வட்டே மூல நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக–இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஆமசாராவில் ஜெபக்கூட்டம் நடத்துவதற்கு தடை விலகியதற்காகத் துதிப்போம். பத்ரு சலாம், சன்பத்தி சலாம் ஆகியோர் நிறைவான சுகம் பெற, ஆமசாரா விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சாது துக்கா திருமதி. ரசாய் துக்கா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தொர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, மஹ்ருராம் உசென்டி மின் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ராமன் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, ராஜ்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். மங்குராம் காவ்டே நிறைவான சுகம் பெற, ராஜ்மன் வட்டே விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே–திருமதி. ரெய்னி வட்டே

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, சுரேகா பொட்டாய், சுக்யாரி பொட்டாய், ரிசாமி, ராம்தாய் ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, சகில் பொட்டாய் மீண்டும் வீடு திரும்பியதற்காகத் துதிப்போம். லட்சுமி பொட்டாய்க்கு சுகப்பிரசவம் கிடைக்க, ரஜாய் வட்டே சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. ஜூகுல் சலாம் திருமதி. சொனாரி சலாம் அக்டோபர்-19

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், படே ஜம்ரி, சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். கஸ்னி சலாம் நிறைவான சுகம் பெற, ஊழியரின் பிள்ளைகள் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய் திருமதி. ஜெய்மதி பொட்டாய்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி, பூஜாவாகி ஆகிய கிராமங்களுக்காக, கெம்லால் பொட்டாய், நித்யா பொட்டாய், சுகந்தி பொட்டாய் ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். புவனேஸ்வரி, ஜெய்மதி ஆகியோர் நிறைவான சுகம் பெற, ராம்நாத் குடும்பம் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட

மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாந்தாகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, மஷி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பார்வதி, சுசீலா, ரமேஷ் ஆகியோருக்கு நல்லமுறையில் அறுவைச்சிகிச்சை நடைபெற, பிர்ஜு, மங்கோதி ஆகியோர் விசுவாசத்தில் வளர, சகானி, காக்ரி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே–
அக்டோபர்-20 திருமதி. ரானோ வட்டே

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காக, வினோத் வட்டே இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சோனா வட்டே சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தஸ்ரு வட்டே, ராம்தாய் பொட்டாய், ஜித்ராம் மத்லாம், ககாரி, மனாய் பொட்டாய் ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி–
திருமதி. சுக்கோ குமிட்டி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காக, சந்தியா, ரேஷ்மா கொர்ரம் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஆவ்தே, சாம்ரே ஆகியோர் சுகம் பெற, ராஜ்குமார், ராஜ்மன், ஜுகாரி, சுகோ ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா
திருமதி. புல்தாய் கருங்கா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்தகஜா ஆகிய கிராமங்களுக்காக, சீமா–கத்வா தம்பதியருக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். லச்சோந்தி, ஜுலு துக்கா, சுக்லி வட்டே ஆகியோர் நிறைவான சுகம் பெற, அமாயுவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா
அக்டோபர்-21 திருமதி. மனிஷா துக்கா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி, மாலிங்நார் ஆகிய கிராமங்களுக்காக, கான்சாய் மண்டாவி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மணிஷா, வன்சிகா, ஜஸ்டினா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
செல்வி. கோத்தாய் பொட்டாய்
திருமதி. பஜாரி வட்டே

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புல்பதிக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். புலநாத், அஜய் (கண் பார்வை), மனு காவ்டே (பக்கவாதம்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. பஞ்நாத் சலாம்
திருமதி. சொனாரி சலாம்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர், கரஞ்சிபாடா ஆகிய கிராமங்களுக்காக, தீபிகா விஷ்பாம்பிடமிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, பினா, பண்டாரு ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ரேமாவாண்ட், சாந்தி நகர் விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திருமதி. தன்பத்தி பொட்டாய்
திரு. மான்கு பொட்டாய் **அக்டோபர்-22**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பார்வதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ராஜ்பதி, ரத்னி வட்டே ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ஊழியரின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. லால்சாய் பொட்டாய்
திருமதி. சீத்தா பொட்டாய்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், கீதும், துர்தா, முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். அன்சு, ரமேஷ் ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்
திருமதி. சுல்மதி கச்லாம்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட படே ஜம்ரி, கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, ராம்சிங் கோண்டா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று–

குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, தன்சு வட்டே விஷப்பாம்பு கடியிலிருந்து சுகம்பெற்றதற்காக, கோத்தாய் பொட்டாய், புல்மதி பொட்டாய் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஹிரதாய் சலாமின் கணவர் மீண்டும் அவரோடு சேர்ந்து வாழ, கசியா பொட்டாய்–மங்கள் பொட்டாய் ஆகியோரின் திருமணம் நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே
திருமதி. சுகோந்தின்

அக்டோபர்-23

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, சுக்கு சலாம் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, கத்வா நேத்தமுக்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். சுபரித் வட்டே சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:செல்வி. சன்பதி காவ்டே

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோர்காவ், முல்லே ஆகிய பகுதிகளுக்காக, தனு இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, புசாரோ, கோலேபாய் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பர்சி, ரனாய் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, கண்டாய் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சுக்ராம் சலாம்
திருமதி. சுக்மதி சலாம்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆமசாரா, மட்டாவாண்ட், ஜம்ஹரி, சிங்நார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, சாந்தி உய்கே விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். பல்சாய் வட்டே, ராய்சிங் துக்கா, சாந்தி உய்கே ஆகியோர் விசுவாசத்தில் வளர, 103 மாணவர்களும் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
செல்வி. சொகாய் கருங்கா
செல்வி. ராம்தாய் குமிட்டி

அக்டோபர்-24

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், பரல்பட், கோரா ஆகிய பகுதிகளுக்காக, புனாய் மலேரியாவிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சோம்நாத், சந்து உசேன்டி, சைத்ராம் உசேன்டி, சுரேஷ் உசேன்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, பிஸ்நாத் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சுக்தாய், ஷிவ்லால், சோனாய், புத்தாய், ராஜ்பதி, ஜக்நாத் ஆகியோர் சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. ரோஹித் பவசாகர்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டோரேசிங்காவுக்காக, மஜா, பெக்ஸ் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தோர்சிங்காவில் ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சுரேஷ் பவசாகர்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மால்டாமாலுக்காக, ரிதேஷ் தண்டிடி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ரேகா, சுமுகி, மலவாந்தி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ராஜீவ், அலிஷா, ஆகாஷ், பிந்து ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. சனாதான் சுனா

சாரைப்பாலி, ஜில்மிலா ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருவதற்காக, சூடாம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சுஸ்மா சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். வாலிபர்கள் ஊழியத்தில் கலந்து கொள்ள, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. கிரோதா சாகர்

அக்டோபர் -25

கைரமால், குக்குடி ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். அணில்குமார், பானுமதி, சுனிதா குமார் ஆகியோர் இரட்சிக்கப்பட, ஊழியரின் மகள் ஆஸ்துமா நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

மத்திய இந்தியா – மகாராஷ்டிரா

அருட்பணியாளர்:
திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கர்வா, படாடி, பாபுபேட், அகர்ஜாரி, அடேகாவ், ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களுக்காக, ஞாயிறு ஒய்வுநாள் பள்ளியில் 30 பேர் கலந்து கொள்வதற்காக, பிரபாகர் ஊழியத்திற்கு உதவி செய்வதற்காகத் துதிப்போம். திருமுழுக்கு எடுப்பவர்கள் (எட்டு பேர்) தடையின்றி எடுக்க, ஐக்கியக் குழுக்கள் தொடர்ந்து நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. அருண் கோரத்வார்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராஜுராவுக்காக, ஷ்ராவந்தி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். முரட்டாட்டமுள்ள இந்த கிராம மக்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

மத்திய இந்தியா – மத்திய பிரதேசம்

அருட்பணியாளர்:
திரு. பிரேம்குமார்

அக்டோபர் -26

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிர்குண்டா, தேஜா அய்லா ஆகிய இடங்களுக்காக, பரத்லால் மண்டேல் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சந்திராவதி, சரிதா (மனநோய்) ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சிந்தூர், ஹார், லஹி, கேளா ஆகிய கிராமங்களில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. கமல்சிங்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிதாரி, ரஜனாரா ஆகிய கிராமங்களுக்காக, சுக்ராம் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, லோஹியாபாய் பிசாசின் பிடியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. சந்தோஷ்குமார் பகெல்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கஹருதா, ரஜினி சாரை, சைலா டோலா, தோட்டா, லமூர்கேஷ் ஆகிய பகுதிகளுக்காக, கோமி மாட்லே, ரஜே மாட்லே ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

ஜார்கண்ட் மாநிலம்

அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்
திருமதி. மம்தா பகெல்

அக்டோபர் -27

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டாடாபானி, பயாக்குரா, பாண்ட்ரியா, ராமானுகஞ்ச், நாக்ரா, கஜூரி ஆகிய கிராமங்களுக்காக, ஷோபா மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பாபுலால்–ஜெய்மாலா, ஜெய்தீப் ஆகியோர் விசுவாசத்தில் வளர, தடைபட்ட ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. மங்கள் மராண்டி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிட்டிபாரக்காக, செபானி முர்மு, பல்வந்தி ஹெம்ப்ரோம் ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காக, சந்திரம்மா முர்மு சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தன்முனி மராண்டி (தைராய்டு நோய்), ஜோசப் முர்மு (கல்லீரல் நோய்), மஞ்சளி ஹன்ஸ்தா (டைபாய்டு காய்ச்சல்) ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. பப்லு முர்மு

லக்கிராம் கிஸ்கு, பிரேம் முர்மு, சுபாஷ் ஹன்ஸ்தக் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, சந்திரம்மா முர்மு சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தெமாய் முர்மு, சஞ்சலி மராண்டி ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

அக்டோபர் -28

உத்தரப்பிரதேசம்
(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி–ஆகிய மக்கள் கூட்டத்தினர்)

அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்
திருமதி. ராஜ்லட்சுமி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, ரூபேஷ், கார்த்திக், மஞ்சு, பேன்சி தேவி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்
திருமதி. சுனித்தா தேவி

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, ராம் நரேஷ் பாயல், தினேஷ் சௌத்ரி ஆகியோர் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, கீதா தேவி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஆசாராம் நிறைவான சுகம் பெற, ஆதர்ஸ், திரேந்திரகுமார், மனோஜ்குமார், சர்வான்குமார் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)

அருட்பணியாளர்:
திரு. வெங்கடேஸ்வரலு
திருமதி. கடம் புஷ்பம் குமாரி

நம்முடைய கானூரு திருச்சபையில் நடைபெற்ற ஒரு நாள் சிறப்பு கூடுகைக்காக கர்த்தரைத் துதிப்போம். நற்செய்தி கேட்ட முனிராஜ், வாசு ஆகியோருக்காக, ஜெசிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, கிருபானந்தத்திற்கு கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:

திரு. பால் வீரமணி
திருமதி. பெல்சியா

அக்டோபர்-29

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செங்காரெட்டி, கன்ரிகா, அன்னமேடு சென்டர், ஜுவல்லபாளம் சென்டர், பெரிகுளம்பாட்டி கன்ரிகா ஆகிய பகுதிகளுக்காக கர்த்தரைத் துதிப்போம். நற்செய்தி கேட்ட பென்சில்லம்மா, பவித்ரா, கவிதா, கார்த்திக், கல்யாண் ஆகியோர் இரட்சிக்கப்பட, சிறுவர் ஊழியத்தில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. உதய்குமார்– திருமதி. பிரசன்னா

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராஜீவ் காந்தி காலனி, சிந்தாரெட்டி பாளம், வெங்கடரெட்டி காலனி, ஹரிநாதபுரம், பாடருபள்ளி ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி கேட்ட பிரியங்காவுக்காக, ரமணையா சுகம் பெற்று வருவதற்காக, கல்யாணி விசுவாசத்தில் வளருவதற்காக கர்த்தரைத் துதிப்போம். வெங்கடம்மா, புஜ்ஜம்மா ஆகியோர் நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)

அருட்பணியாளர்:
திரு. சாமுவேல் பிரபாகர்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோளதேவனஹள்ளி, வெங்கடப்பூர் ஆகிய பகுதிகளுக்காக கர்த்தரைத் துதிப்போம். நற்செய்தி கேட்ட இராமு, ஆகாஷ், முனியம்மா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஒடிசா

அருட்பணியாளர்:
திரு. அப்பொல் மண்டல்
திருமதி. சுமித்ரா மண்டல்

அக்டோபர்-30

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ரெங்காபதி, கஞ்சாரா, குபுடாடிதி, நியுபாரா, ராணிபதேர், குன்கி பாரா, துமார்திதி ஆகிய கிராமங்களுக்காக, ஆரம்ப சுகம் பெற்றதற்காக, அர்சு கோண்டு, பிரியங்கா பாடி நேரு, சாந்தினி, சுக்நாத் ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. லெலன் தெளங்கல்
திருமதி. பிரிட்டி லெலின்

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாம்தர்குரா, பேலாபட், கும்தாரா ஆகிய பகுதிகளுக்காக, மோத்து இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். பபுலா ஹெல்யன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

(வடகிழக்கு மாநிலங்கள்)

அருட்பணியாளர்:
திரு. தர்மேந்திரா தெபர்மா
(மே. திரிபுரா)

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிருஷ்ணப்பூர், சிமண்டியாகா ஆகிய கிராமங்களுக்காக, பிந்து கர்யா, சைனிக் கர்யா, தருண் கர்யா ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். அபு தெப்பர்மா, அம்ரித், மிலன், சொர்ணமாய் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அக்டோபர்-31

அருட்பணியாளர்:
திரு. மங்லியான்லம் (வ.திரிபுரா)

கங்ராய் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, மதோத்ராஜ் ரியாங் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். மதோத்ராஜ் சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற–மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. ஹௌகௌலால் சாம்தே(வ. திரிபுரா)

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டங்க பாரா, ப்ருபாரா ஆகிய கிராமங்களுக்காக, இருவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். டங்கபாரா விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

அருட்பணியாளர்:
திரு. மென்டு தெபர்மா (மே. திரிபுரா)

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்காதான், என்.சி பாரா, ராஜேந்திர பாரா, சரத் சதுரி பாரா, பேலஜா பாரா, பெலுவா பாரா ஆகிய கிராமங்களுக்காக, கிஷோர் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். பபித்ரா பாவ் போதைப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, மசாராய் கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

*****



ஜானும் மாணிக்கமும் உற்சாகமாகப் பேசிக்கொண்டே வருகின்றனர்.

சாலமோன்: குட்டிவினிங் தம்பிகளா? என்ன வரும்போதே மிக காரசாரமாக பேசிக் கொண்டே வருகிறீர்கள்.

ஜான்: காரசாரம் ஒன்றும் இல்லை சார். இன்று வகுப்பிலே ஒரு மாணவர் இயேசு யூதர்களுக்கு மட்டும் தான் என்று கூறினார். அதற்கு ஆதாரமாக மத்தேயு 10: 5-6ஐ வாசித்தார். இப்போது, அதை நானும் திரு விவிலியத்திலிருந்து வாசிக்கிறேன்.

இயேசு பன்னிருவரை அனுப்பியபோது அவர்களுக்கு அறிவுரையாகக் கூறியது: "பிற இனத்தாரின் எப் பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். மாறாக வழிதவறிப்போன ஆடுகளான இஸ்ரவேல் மக்களிடமே செல்லுங்கள் என்பது பற்றியே பேசிக் கொண்டு வந்தோம்.

சாலமோன்: என்னதான் பேசினீர்கள்?

மாணிக்கம்: அந்த மாணவர் சொன்ன அந்த இரு வசனங்களை வைத்து ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது என்று பேசினோம். இயேசுவினுடைய மூதாதையர் பட்டியலில் எப்படி யூதரல்லாத பெண்கள் (தாமார், ராகாப். ரூத், பத்சேபாள்) இருந்தனர் என்று பேசினோம்.

ஜான்: அது மட்டுமல்ல அந்த மாணவர், இயேசு தீரு, சீதோன் பகுதிகளுக்குச் சென்றபோதும் தெளிவாக தம் சீடர்களிடம் "காணாமல் போன இஸ்ரவேல் மக்களிடம் மட்டுமே நான் அனுப்பப்பட்டேன்" (மத்தேயு 15: 24) என்ற வசனத்தையும் எடுத்துப் பேசினார். இது பற்றி என்ன நினைக்கிறீர்கள் சார்?

சாலமோன்: (லேசாக சிரித்துக்கொண்டே) முன்பே ஒருமுறை நாம் மத்தேயு 10:5-6 ஐப் பேசினோம். "அறையில் ஆடி பின்னர் அம்பலத்தில் ஆடவேண்டும்" என்பது போல் முதன்முதலில் சீடர்கள் பணி செய்ய அனுப்பப்பட்டபோது அதை அவர் கூறினார்.

ஆனால், லூக்கா 10:1-12 வசனங்களில் 70 பேரை (சிலர் 72 என்று கூறுகின்றனர்) அனுப்புகையில் அப்படிப்பட்ட (யூதருக்கு மட்டும் என்னும்) குறுகிய இலக்கைக் கூறவில்லை.

தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் செல்லுங்கள் என்றுதான் கூறினார். மாணிக்கம், நீ யோவான் 4:39-40ஐ வாசி.

மாணிக்கம்: (திருவிவிலியத்தை வேகமாய்ப் புரட்டிப் படிக்கிறார்). தான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார் என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு, அவ்வூரிலுள்ள சமாரியர் பலர், இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

சமாரியர் அவரிடம் வந்தபோது அவரைத் தங்களோடு தங்குமாறு கேட்டுக் கொண்டனர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார்.

சாலமோன்: சமாரியரிடம் செல்ல

வேண்டாம் என்று கூறப்பட்ட சீடர்களுடனேயே அவர் இரண்டு நாட்கள் சமாரியரிடம் தங்கியதைக் கூறும் பகுதி அது.

தீரு, சீதோன் பகுதியில் அவர் முதலில் "காணாமல் போன இஸ்ரவேல் மக்களிடம் மட்டுமே அனுப்பப்பட்டேன்" என்று கூறினாலும், முதலில் அந்தத் தாயிடம் "பிள்ளைகளின் அப்பத்தை நாய்களுக்குக் கொடுக்க மாட்டார்கள்" என்று எதிர்மறையாக (Negative) பேசினாலும், பின்னர் அந்தப்பெண்ணின் விசுவாசத்தைப் பார்த்து அவள் மகளுக்குச் சுகம் அளிக்கிறார்.

அந்தக் கானானியப்பெண் சீரோ பெனிக்கியாள் என்றும், கிரேக்கப்பெண் என்றும் அழைக்கப்பட்டாள். அதினாலே அவள் யூதரல்ல என்பது திட்டவட்டம். அவள் மகள் இயேசுவால் சுகம்பெற்றது எப்படி?

என்னைப்பொறுத்தவரையில் இயேசு செய்த ஒரே வெளி நாட்டுப்பயணம் அதுதான். அதிலும் யூதரல்லாத ஒரு வேற்று இனக் குடும்பத்திற்குத்தான் அவர் பணி செய்தார். அதற்காகத்தான் அவர் தீரு, சீதோனுக்கே சென்றிருக்க வேண்டும்.

ஜானும் மாணிக்கமும்: அருமையான கருத்து.

சாலமோன்: மத்தேயு 8: 5-13இலும், லூக்கா 7:1-10 இலும் வரும் ஒரு சுகமளிக்கும் நிகழ்ச்சியில் ரோமர் இனத்தைச் சேர்ந்த, நூற்றுக்கதிபதிக்கு உதவுகிறார். அவனுடைய விசுவாசத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்.

ஜான்: அப்போஸ்தலர் 1:8 இல் கொடுக்கப்பட்ட கட்டளையை இயேசுவே நிறைவேற்றியிருக்கிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

சாலமோன்: அது சரியான நினைப்பே. எருசலேம் யூதேயாவில் தொடங்கி, சமாரியா சென்றபின் உலகின் இறுதிவரை சாட்சியாக இருங்கள் என்பது தானே அந்த அப்போஸ்தலர் 1:8 கூறுவது.

பிதா தம் ஒரேமகனை அனுப்பியது உலகம் முழுவதற்கும்தானே. அதுதானே நமக்கு நன்றாய்த் தெரிந்த யோவான் 3:16 கூறுவது.

மாணிக்கம்: இயேசுவின் சீடர்களில் தோமா நமது நாட்டிற்கு வந்தார். அது உலகின் கடைசிபரியந்தம் உள்ள யூதரல்லாத மக்கள் பணிதானே. மற்ற சீடர்கள் எங்கு சென்றனர் சார்? சொல்லுங்களேன்.

சாலமோன்: நல்ல கேள்வி. முதல் நூற்றாண்டில் நடைபெற்ற வரலாறு. சரியாக எழுதப்படவில்லை. ஆனாலும் பாரம்பரிய குறிப்புகள் இப்படிக் கூறுகின்றன: பேதுரு – யூதேயா, சிரியா, இத்தாலியிலுள்ள ரோம்; அங்கே மரணம்.

அந்திரேயா–கிரேக்க நாடு, யாக்கோபு–ஸ்பெயின் (ஆனால், எருசலேமில் இரத்தச்சாட்சி), யோவான்–துருக்கி, பத்மு தீவு, எபேசு.

பிலிப்பு–துருக்கி & சிரியா, பற்தொலமேயு–வடமேற்கு இந்தியா! அர்மீனியா, மெசபடோமியா, மத்தேயு–எத்தியோப்பியா, பாரசீகம், மத்திய தரைக்கடல் நாடுகள்.

யாக்கோபு–எகிப்து, யூதா (ததேயு)–சிரியா, மெசபடோமியா சீமோன்–பாரசீகம் (ஈரான்), எகிப்து இவையாவும் அப்போஸ்தலர்கள் பல நாடுகளுக்குச் சென்று யூதரல்லாதவர்களை கிருஸ்துவின் அடியார்களாக மாற்றினர் என்ற உண்மையையே வெளிப்

படுத்துகின்றன.

ஜான்: மிக அருமையான தகவல்கள்.

சாலமோன்: இவை எல்லாமே ஒரு முக்கிய செய்தியை நமக்குச் சொல்லுகின்றன

ஜானும், மாணிக்கமும்: அது என்ன சார்?

சாலமோன்: அது இயேசுவின் விண்ணரசு (பரலோக ராஜ்யம்) பற்றிய உண்மைதான்.

அது, நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைப் பார்த்த இயேசு சொன்ன ஒரு வசனம். மத்தேயு 8:11இல் அதை இப்படி வாசிக்கிறோம்:

அனேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு பந்தியிருப்பார்கள்.

பின்னாலே வந்த பவுலடியாரும், "யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்" (1கொரி 1:24) என்றும், "யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை... நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28) என்றும் எழுதுகிறார்.

இயேசு கூறிய இறையரசு அல்லது விண்ணரசின் அடிப்படைத் தத்துவங்களில் அது ஒன்று. எல்லாரும் சமம். நேரமாகிறது. அடுத்த வாரம் சந்திப்போமா?

(எல்லாரும் செல்லுகின்றனர்).

அடுத்த மாதமும் தொடருவோம்...

*****



பிலிப்பியர் 1-4 அதிகாரங்கள்

பொருத்துக

1. ஜீவன்	– ஆதாயம்	1:21
2. வாது	– வீண் பெருமை	2:3
3. கிருபை	– பங்கு	1:7
4. நாய்கள்	– சுன்னத்துக்காரர்	3:2
5. நஷ்டம்	– குப்பை	3:11

கோழட்ட இடங்களை நிரப்புக

1. ஏகசிந்தையும், ஏக அன்புள்ள, ஆத்துமாக்களாய், சந்தோஷத்தை 2:2
2. இயேசுவுக்குள், பரம அழைப்பின், இலக்கை 3:14
3. மகிமையும், துதியும், நீதியின் கனிகளால் 1:10
4. அழிவு, வயிறு, இலச்சையே, பூமிக் கடுத்தவைகளை 3:19
5. கர்த்தருக்குள், எயோதியாளுக்கும், சிந்திகேயாளுக்கும் 4:2

விடை எழுதுக

1. சிலர் பொறாமையினாலும், விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் 1:15
2. அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் 2:12
3. பவுலின் சகோதரன், உடன் வேலையாள், உடன் சேவகன், உங்கள் ஸ்தானாபதி, பவுலின் குறைச்சலுக்கு உதவி செய்தவன். 2:25
4. உபகாரத்தை நாடாமல் உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படி 4:17
5. உண்மையுள்ளவைகள், ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ 4:8

2026 செப்டம்பர் மாத வேதவினா விடை போட்டியில்
சரியான விடை எழுதியவர்களை பாராட்டுகிறோம்.

மதுரை
நளினி
வீலா சுரேஷ்
ஞானசிரோன்மணி
வினோதினி
மனோகராஜ்
சம்பு ஜெயச்சந்திரன்
சுசீலா ஆபிரகாம்
டேவிட் ஜெயச்சந்திரன்
ஜான்சி காமராஜ்
பீலோ சாமுவேல்
ஆசீர்வாதம்
கலா செல்வகுமாரி
ஹேமலதா வில்சன்
அந்தோணி கார்த்தி
தெல்மா ஸ்டான்லி
ரத்னாபாய் ஜேசுதாசன்
ரஜினி பியூலா ஷோபிகா
கிறிஸ்டி ஜான்சன்
ஜோலி இம்மானுவேல்
குளோரி மல்லிகா
குளோரி ஸ்டீபன்
ஜெமி ஸ்டீபன்
ஆண்ட்ரூஸ்
ராணி ஸ்டான்லி பால்
அருள்மொழி ஜான்சன்
பங்கஜம் மார்த்தாண்டம்

கன்னியாகுமரி
ரெத்னா ராஜ்குமார்
மோகன் சி கமலம்
டெய்ஸி டேவிட்
லைலா பென்னட்
லலிதா நெல்சன்
அருளப்பன்
ஜெபஜோதிபாய்
லீலா அய்யாக்கண்
பமீலா எட்வின்
பிரேமா ஜெரால்டு
கிளாரெஸ்ட்
சுமதி ஆல்பர்ட்
லலிதா நெல்சன்
தேவசகாயம்
பிராகரன்ஸ் தங்கராஜ்
பியூலா ஜான்சன்
ஆலிஸ் ஜேன்
டேவிட் மனோகர்
பேசில் பால்
லில்லி புஷ்பம்

திருநெல்வேலி
ரூத் கமலம்
சுந்தரி ஸ்டீபன்
சந்திரலீலா திரவியம்
செல்வராஜ்
ஜெயசிங்
ரோஸ்லின் ஜோசப் பீட்டர்
பத்மா ராஜையா
ஜெனிபர் சில்வியா
கலா சைமன்
வசந்தா பாலசேகரன்
சூர்யகுமாரி ஜெயராணி
ஹெலன் ஸ்வீட்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
பாக்கியம்
ஞானசுந்தரி நாகராஜன்
கிளாடிஸ் ராஜையா
ஜெபா நியூட்டன்
கஸ்தூரி எலியாஸ்
வில்லியம் பிரெடெரிக்
கிரேஸ் அகஸ்டின்
ஜோதிமாலா மனுவேல்
சாந்தி ராஜன்
ரெஜினா சாலமோன்
மார்கிரெட் பியூலா
வயலட் கிறிஸ்டோபர்
சந்திரபோஸ்
ஜேன் தர்மராஜ்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
சந்திரா தாமஸ்
ஜான்சி ராணி
சகுந்தலா எத்திராஜ்
பெட்ரீசியா ஜஸ்டஸ்

தென்காசி
செல்வி ஜேக்கப்

தூத்துக்குடி
ஸ்டான்லி ராஜாமணி
சாலமோன்
நிமிஜா சாமுவேல்
தேவகிருபை
குளோரி செல்வராஜ்
அமிர்த புஷ்பம்
பாக்கியராஜ்
ஜோதிமணி வில்சன்
கிருபாசனம் ரெமீஜியஸ்
ஹெலன் திலக்
அன்னத்தாய் ஆல்பர்ட்
ஷேபா கோயில் பிச்சை
சாந்தகுமாரி
ரெத்தனாவதி முத்துராஜ்
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
ரெத்னாம்மபாள் ஈஸ்டர்ராஜ்
ஆக்னஸ் மேரி கீதா
ஞானமணி ஹெப்சிபா
தியாகராஜன்
ரூபவல்யா
ஆனி இன்பநாயகம்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
ஜாய்ஸ் ஜான்சன்
லீலா டேவிட்சன்
செல்வலதா
பெல்சியா ஏஞ்சல்
ஆலீஸ் குணசீலி

சென்னை
கனகா வேணுகோபால்
கரோலின் ராஜகுமாரி
வீலா சேகர்
ரோஹிணி ஜேசன்
டேவிட் ஜெயக்குமார்
யூனிஸ் ரிச்சர்ட்
ஹெப்சிபா தாமஸ்
கிரேஸ் தங்கதுரை
அன்னாள் ஜான்
ராபின் தாமஸ்
செலின் ராணி டேவிட்
ஹில்டா எலிசபெத்
சாந்தி டென்னிசன்
ஜெயகுமாரி

செங்கல்பட்டு
ஜரீன் லீனா
ஜெயமோரி சந்திரசேகரன்

திருச்சி
டேவிட்
ஜெபமணி டேவிட்
ராணி
சூசன்னா
லில்லியன் ஜோசப்
ஜெபசீலி ஜெயக்கொடி
சிசிலியா ஜெயபிரகாஷ்

கோயம்புத்தூர்
ஆனந்தன்
மைதிலி
சின்னக்கண்ணு தனபால்
கிறிஸ்டிபாய் வாசன்
ஜான்சி

தேனி
பொன்ராணி அன்புநாதன்
ஏஞ்சல் பாக்கியராஜ்
ஜாய்ஸ் தேவராஜ்
மாலா வில்சன்
சுசீலா ஜான்
நேசமணி சாமுவேல்
எலிசபெத் பால்ராஜ்

புதுக்கோட்டை
சாந்தி வில்லியம்

தஞ்சாவூர்
மல்லிகா ஞானபாய்
குணசீலி ஸ்டீபன்
சாந்தி குணசேகரன்
பிரமீளா செல்வம் ஹானா
ரோஸலின் செல்வராணி
ஜோசப்பின் செல்லத்தாய்
ராணி பாண்டியன்
சிந்தி ஜாஷ்வா

சிவகங்கை
லலிதா பெவின்சன்
அன்பு கமலம்
பாலின் மார்டின்

ஈரோடு
இமெல்டா சுந்தர்சிங்
இமாகுலேட்

பெங்களூரு
சூர்யா ரிச்சர்ட்சன்

நீலகிரி
பத்மாவதி அர்னால்டு
உஷா பெஞ்சமின்
நிர்மலா ராஜன்
ரோஸ் ஸ்வீட்டி

சேலம்
ரோலண்ட் அருள்ராஜ்
இவாஞ்சலின் ஜோன்ஸ்
பியூலா கனகராஜ்
பழனியம்மாள் சாமிநாதன்
அனிதா குமாரி

திருப்பூர்
கனகசத்தியவதி

விருதுநகர்
பொன்னுத்தாய் ராஜேந்திரன்
சாந்தகுமாரி
ஞானசெல்வன்
பிளாரன்ஸ் ராஜேந்திரன்
லீலாவதி பாலசிங்

திண்டுக்கல்
கெத்ஸி எலிசபெத்
அகஸ்டி ராபர்ட்
அனிதா மார்டின்
பால் சின்னத்தம்பி

ராணிப்பேட்டை
தேவகிருபை நல்லையா

பாண்டிச்சேரி
பியூலா ஜெசுராஜன்

வேலூர்
மெர்ஸி புளோரா

திருவள்ளூர்
ஜூலியட் புஷ்பராணி

திருவண்ணாமலை
திரவியம்

கள்ளக்குறிச்சி
வசந்தா செல்வராஜ்

மும்பை
லீலா எர்னஸ்ட்

இராமநாதபுரம்
ஸ்டெல்லா வசந்தகுமாரி

கடலூர்
செல்லபாய்

அக்டோபர் மாத வேத வினாக்கள். 2026

கொலோசெயர்:
1 முதல் 4 அதிகாரங்கள் வரை

பொருத்துக

1. ஞானம் - சபை
2. தற்சுரூபம் - லூக்கா
3. சரீரம் - இயேசு
4. வைத்தியன் - விவேகம்
5. யுஸ்து - முந்தின பேறு

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. அவருக்குள் அவருடைய .... நமக்கு உண்டாயிருக்கிறது.
2. நீங்கள் கேட்ட ..... உண்டாகும் ..... விட்டு அசையாமல் .... நிலைத் திருப்பீர்களானால் அப்படியாகும்.
3. ..... தான் செய்த அநியாயத்திற்கேற்ற ..... அடைவான் ..... இல்லை.
4. அவருக்குள் .... என்பவைகளாகிய ..... அடங்கியிருக்கிறது.
5. ..... முன்பாக ..... நடந்து ..... பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

விடை எழுதுக

1. பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம் எது?
2. அர்க்கிப்பிடம் சொல்ல வேண்டியது என்ன?
3. பர்னபாவுக்கு இனத்தான் யார்?
4. உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன் யார்?
5. எவைகளை விட்டுவிட வேண்டும்?

தொகுப்பு: Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உங்களுடைய விடைகள் எங்களுக்கு வந்து சேர வேண்டிய
கடைசி நாள்
இம்மாதம் 20 ஆம் தேதி



செப்டம்பர் மாத வேதவினா-விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!



1 திருமதி. **ஜூலியட் புஷ்பராணி** - திருவள்ளூர்
2 திருமதி. **ரோஸ் ஸ்வீட்டி** - நீலகிரி
3 Rev. **ஞானசெல்வன்** - விருதுநகர்

நடப்புச் செய்திகள்

உலகையும், நாட்டையும் பாதிக்கும் முக்கிய நிகழ்வுகள்

புதுடெல்லி: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்வதற்கான சம்பள உச்ச வரம்பை ரூ.15,000-லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. சமூகபாதுகாப்பு திட்டத்தின் கீழ் பிஎப் சலுகைகளைப் பெறுவதற்கான மாதாந்திர அடிப்படை சம்பள வரம்பு 2004 முதல் 2014 வரை ரூ.6,500 ஆக இருந்தது. இது 2014-ல் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. இதன்படி, புதிதாக வேலைக்கு சேர்பவர்களின் அடிப்படை சம்பளம் ரூ.15,000 ஆக இருந்தால் மட்டுமே கட்டாய சமூக பாதுகாப்பு கிடைத்தது. அதற்கு மேல் சம்பளம் பெற்று புதிதாக சேர்பவர்களை நிறுவனங்கள் கட்டாயமாக பிஎப்-க்குள் சேர்க்க வேண்டியதில்லை. அப்படியே சேர்க்கப்பட்டு அவர்களின் சம்பளம் ரூ.1 லட்சமாக இருந்தாலும், ரூ.15,000 வரம்பை பின்பற்றி ஊழியர் மற்றும் நிறுவனம் தலா ரூ.1,800 பங்களிப்பு செலுத்தினால் போதும். இந்த ஊதிய வரம்பை உயர்த்த வேண்டும் என தொழிலாளர் நல அமைப்புகள் கோரி வந்தன. அதன்படி பிஎப் தொகை பிடித்தம் செய்வதற்கான மாத சம்பள வரம்பை ரூ.25,000 ஆக உயர்த்தும் திட்டம் முன் வைக்கப்பட்டது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதன் வாயிலாக, ஊழியர்களின் மாதாந்திர பிஎப் பங்களிப்பு 3,000 ரூபாயாக அதிகரிக்கும். நிறுவனமும் அதே அளவு பங்களிப்பு செய்ய வேண்டியிருக்கும். பிஎப் சேமிப்பும், ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்பும் அதிகரித்து, நீண்டகால சமூக பாதுகாப்பு வலுப்பெறும். இதன் மூலம் 51 லட்சத்துக்கும் அதிகமானோர் பயனடைவார்கள். குறிப்பாக, அவர்களுக்கு, பிஎப் சேமிப்பு, ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் மூலமான ஓய்வூதிய பலன்கள், ஊழியர்களின் வைப்பு நிதி சார்ந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுப் பாதுகாப்பு ஆகியவை உரிய விதிகளின்படி தடையின்றி கிடைக்கும். சம்பள வரம்பு உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.11,339 கோடி கூடுதலாக செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தற்போது வழங்கப்பட்டு வரும் ஆண்டறிக்கை நிதி ஆதரவான ரூ.10,250 கோடியை விட அதிகமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்துக்கு தோராயமாக ரூ.56,696 கோடி செலவிடப்படும்.

வாஷிங்டன்: ரஷ்யா மற்றும் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை கொள்முதல் செய்யும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது 100 சதவீதம் வரை கூடுதல் சுங்க வரி விதிக்க வகை செய்யும் மசோதாவுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. ரஷ்யா மற்றும் ஈரான் மீது தடைகளை விதிக்கும் 'லின்ட்சே ஓ கிரகாம் ரஷ்யா மற்றும் ஈரான் தடை சட்டம் 2026'-க்கு அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்தச் சட்டம் மூலம் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கொள்முதல் செய்யும் முக்கிய நாடுகள் மீது 100 சதவீதம் வரை வரி விதிக்கும் அதிகாரத்தை அதிபர் ட்ரம்ப் பெற்றுள்ளார்.

புதுடெல்லி: செமிகண்டக்டர் துறையில் ரூ.1 லட்சம் கோடி முதலீடுகளை இந்தியா ஈர்த்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். நாட்டின் செமிகண்டக்டர் துறையில் உலகளாவிய ஒத்துழைப்பு, முதலீடு, புத்தாக்கம், திறன் கட்டமைப்பை மேம்படுத்துவதுடன் முதலீட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தாக்க நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் 5-வது 'செமிகான் இந்தியா 2026' மாநாடு மற்றும் கண்காட்சியை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசியதாவது: கடந்த ஜூலை மாதம், மத்திய அமைச்சரவை ரூ.1,27,500 கோடி ஒதுக்கீட்டில் செமிகான் 2.0 திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. இது, உற்பத்தி ஆலைகள் மற்றும் பேக்கேஜிங்கை தாண்டி, பரந்த செமிகண்டக்டர் சூழலமைப்பின் மீது கவனத்தை விரிவுபடுத்துகிறது. செமிகான் 2.0 திட்டம் அறிவிக்கப்பட்ட சில மாதங்களிலேயே, உலகளாவிய மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து ரூ.1 லட்சம் கோடி வரையிலான முதலீட்டு வாக்குறுதிகளை இந்தியா பெற்றுள்ளது. இது, சிப் தயாரிக்கும் நாடாக மாறுவதற்கான அரசின் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள ஒரு வேகமான வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த முதலீடுகள் அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய செமிகான் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மைக்ரான் மற்றும் முருகப்பா குழுமத்தின் சிப் பிரிவு போன்ற சில நிறுவனங்கள் ஏற்கனவே வணிக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு மத்திய அமைச்சர் பேசினார்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (17.19/09/2026)

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

58/1. முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை–73.
அலைபேசி: 94459 24440 | email: contacticgm@gmail.com

அக்டோபர் 2026.



கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் பங்காளர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள்.

இந்தியாவின் 9 மாநிலங்களில் அருட்பணியாற்றி வரும், இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் அருட்பணிகளை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி வருகிற உங்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஒவ்வொரு வருடமும், பலவிதமான நோய்கள் மற்றும் தொடர்ந்து சிகிச்சையெடுக்க வேண்டிய நோய்களாலும், நமது அருட்பணியாளர்கள் பாதிக்கப்பட்டு, சிகிச்சையிலிருக்கின்றனர்.

அவர்களுக்கென்று உதவி செய்வதற்காக, சில வருடங்களுக்கு முன்பாக தனியாக நிதி ஒன்றை ஏற்படுத்தினோம். அதில் சேருகின்ற நிதியைக் கொண்டும், மற்றும் பலருடைய உதாரத்துவமான உதவிகளாலும் அதன் தேவைகளை சந்தித்து வருகிறோம்.

இந்த நிதிக்கென்று வருடத்திற்கொருமுறை உதவும் அடிப்படையில், உங்களுடைய உதாரத்துவமான உதவியை எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் அருட்பணியாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் சுமை குறைந்து, அருட்பணி அறிவிக்கும் பணியை தீவிரப்படுத்த முடியும். இதற்காக ஜெபித்து உதவுங்கள்.

"...வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே... மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்..." (மத்தேயு 25:34,40)

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
அருளிதிரு.S. டேவிட் சாலமோன்,
பொதுச்சேவகர்.



உங்களுடைய விருப்பத்தைத் தேர்வு செய்து இந்தத் தேவையைச் சந்திக்க வாருங்கள்.

₹1000 ☐ ₹2000 ☐
₹5000 ☐ ₹10000 ☐

ACCOUNT NAME	: INDIA CHURCH GROWTH MISSION
ACCOUNT NUMBER	: 926010015545855
Bank	: AXIS
BRANCH NAME	: SELAIYUR, CHENNAI-73
IFSC CODE	: UTIB0001181

icgm1014@sbi

ICGM

ஆன்லைனில் காணிக்கை அனுப்புபவர்கள் மேலே உள்ள வங்கிக்கணக்கிற்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS/Whatspp) அனுப்பவும். உங்களுக்கு இரசீது அனுப்ப உதவியாயிருக்கும்

Registered with RNI Under No:TNTAM/2000/01585

Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026
Posted at BPC Madurai - 625 001.
Date of publishing: 28th September 2026 - Date of posting - 28th,29th and 30th September 2026.

Printed by Mr.S.Ghunashekaren and Published by Mrs. Selva Dani Chandra Dhas on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/7, Ahimsapuram First Street, Extension, Near Saraswathi Theater, Sellur, Madurai-625002 and Published at 3/211. Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...

மதுரை பல்கலைநகர் ஆலயத்தில் செப்டம்பர் 18ஆம் தேதியன்று தமிழ்நாடு ஊழியர்களுக்கு வரவு செலவு கணக்குகளைக் கையாளுவது குறித்து, ஒருநாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. ஊழியர்களுக்கு இப்பயிற்சியைக் கொடுத்து உற்சாகப்படுத்திய திரு.தம்பிராஜ், திரு.ஞானசேகர் மற்றும் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்த **Rev.** இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்) ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செப்டம்பர் 27ஆம் தேதியன்று, மதுரையிலுள்ள சிஎஸ்ஐ தூய ஜார்ஜ் ஆலயத்தில் நமது இயக்கத்தின் ஊழியங்களைக்குறித்தும், தேவசெய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். திரு. பிரின்ஸ் ராய்சன் தனது அனுபவ சாட்சியையும், ஒடிசாவில் நடைபெறும் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டார். இந்த நல்ல வாய்ப்பை அருளிய திருச்சபையின் ஆயருக்கும், **Dr.** காருணியாள் சாமுவேல் மற்றும் திருச்சபையின் செயலர்–பொருளர் ஆகியோருக்கும், இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திரா நகரில் (மதுரை) நடைபெறும் ஆலய மறுகட்டுமானப்பணி விரைவில் முடிவடையவும், குருணைக்கல்பட்டியில் (திருப்பூர்) ஆலய மறுகட்டுமானப்பணி விரைவில் ஆரம்பிக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நமது இயக்கத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குகிற உங்களனைவோராடும் தேவகிருபை என்றும் நிலைத்திருப்பதாக.

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
அருள்திரு.S. டேவிட் சாலமோன்,
பொதுச்சேவகர்.

If undelivered, please return to:

Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 94459 24440

icgm1014@sbi

ICGM

To: